# சுருக்கம்

நெடுஞ்சாலைத்துறை - திருச்சி (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் மற்றும் கோட்டம் – காவிரியாற்றின் குறுக்கே கி.மீ.315/6-316/2-ல் உயர்மட்டப்பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை – நிர்வாக ஒப்புதல் - ஆணை - வெளியிடப்படுகிறது

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்பி.2) துறை

அரசாணை (நிலை) எண்.50 நாள்: 30-03-2022

பிலவ, பங்குனி 16, திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கவும்:

தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கடித எண்.14054/திட்டம்/2021, நாள் 22.10.2021

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை (State Highways Urban 9) கி.மீ.315/6-316/2-ல் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலமானது திருச்சி நகரையும் ஸ்ரீரங்கத்தையும் இணைக்கும் முக்கிய மாநில நெடுஞ்சாலையாகும் எனவும், இப்பாலம் 1975 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது எனவும், இப்பாலம் 541.46 மீட்டர் நீளமும், நான்கு வழித்தடமாக 15.00 மீட்டர் அகலம் கொண்ட ஓடுதளமும் 16 கண்களை (Span) கொண்டதாகும் எனவும், மேலும் 50 ஆண்டுகள் நெருங்கும் நிலையில் இப்பாலம் பழுதடைந்துள்ளது எனவும், இப்பாலம் திருச்சியையும், ஸ்ரீரங்கத்தையும் இணைப்பதால் போக்குவரத்து மிகவும் அதிகமாக உள்ளது எனவும், தற்போதைய போக்குவரத்து செறிவு (PCU) 22945 ஆகும் எனவும் தெரிவித்து, இதற்கு மாற்றாக புதிய பாலம் அமைப்பது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், இந்த பாலமானது வரலாற்று சிறப்பு மிக்க ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில், மலைக்கோட்டை கோவில் மற்றும் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வர் கோவில் ஆகிய திருத்தலங்கள் மற்றும் மதுரை, சேலம், நாமக்கல் பெங்களூரு போன்ற முக்கிய நகரங்களை இணைக்க புதிய உயர்மட்ட பாலம் அமைப்பது அவசியமாகும் எனவும், ஏற்கெனவே உள்ள பாலம் பழுதடைந்துள்ளதால் தற்போது மற்றும் எதிர்கால போக்குவரத்துச் செறிவிற்கு ஏற்ப நான்கு வழித்தடம் கொண்ட ஓடுதளமாகவும் 16 கண்களை (span) கொண்ட புதிய பாலம் அமைப்பது அவசியமாகும் எனவும், மேலும் மக்கள் பிரதிநிதிகளும் இப்பாலம் அமைக்க கோரிக்கை விடுத்துள்ளதாகவும், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், 30.12.2021 அன்று திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார்:

"திருச்சி-திருவரங்கம் இடையிலான பாலம் பழமையானதாக இருக்கிறது அதனால் புதிய பாலம் அமைப்பது குறித்தும் – திருச்சி நீதிமன்ற ரவுண்டானா முதல் சுண்ணாம்புக்காரன்பட்டி வரையில் புதிய வெளிவட்டச்சாலை ஒன்றை அமைப்பது குறித்தும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் அதன் பிறகு அந்த பணியும் விரைவில் தொடங்குதல் ".

4. அதனடிப்படையில், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் சென்னை – திருச்சி - திண்டுக்கல் சாலை (State Highways Urban 9) கி.மீ. 315/6 - 316/2-ல் காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.45.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. மேலே, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கருத்துருவானது அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று சென்னை – திருச்சி - திண்டுக்கல் சாலை (State Highways Urban 9) கி.மீ. 315/6 - 316/2-ல் காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.45,00,000/-க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054-சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு-80-பொது-004-ஆராய்ச்சியும் மேம்பாடும் மாநிலச் செலவினங்கள்- AA சாலைகள் மற்றும் பாலங்கள் என்பதன் கீழ் திட்டப்பணிக்கான ஆய்வு/மதிப்பீடு-416-பெரும் பணிகள்-01 பெரும் பணிகள்.
(IFHRMS: 5054-80-004-AA -41601)

7. மேலே பத்தி-5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு எண்.14385/PWI/2022 நாள் 28.03.2022 -ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னை-25
மாநில கணக்காயர், சென்னை-18/35

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9.

முதன்மை செயலாளரின் தனிச் செயலர்,

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9

நிதி (பொ.ப.1 / வ.செ.பொது.I/வ.செ.பொது.II) துறை, சென்னை-9

சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9

தேசிய தகவல் மையம், தலைமைச் செயலகம், சென்னை-9

இருப்புக்கோப்பு/உதிரி நகல்

கோப்பு எண்.15117/எச்.ப்பி.2/2021

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/3/22

பிரிவு அலுவலர்